FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(குநவி தொபிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129887

1. District : Thanjavur PS: V & AC Year: 2026 FIR No.: 03/2026 Date: 08.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: I.P.C Sections பிரிவுகள்: 120(B), 409, 466

(ii) Act சட்டம்: BNS Sections பிரிவுகள்: 61(2), 316(5), 337

(iii) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 13(1)(a) r/w 13(2)

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 3.1.2024 Date to : 31.12.2024
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் January நாள் வரை December

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 08.06.2026 Time : 14.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: தஞ்சாவூர் மாவட்டம், மத்திய பேருந்து நிலையம் தென்கிழக்கு, சுமார் 2 கி.மீ
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : [illegible] (b) Father's/ Husband's Name : [illegible]
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1973 (d) Nationality : இந்தியர் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : அரசாளர் (g) Address : [illegible] தஞ்சாவூர்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. R. கார்த்திகேயன், தொப நாலப்பா, முன்னாள் பிரிவு அலுவலர், மத்திய பேருந்து நிலையம், தஞ்சாவூர் மாவட்டம்.
2. திரு. L. மதியழகன், தொப குடிசார்ந்தோர், அலுவல உதவியாளர், மத்திய பேருந்து நிலையம், தஞ்சாவூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

முதன்மை விசாரணையில் அடிப்படையில்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Mr. P. Padmapriya Rank ASI to take up the Investigation / Refused Investigation / transferred to PS VGR, Thanjavur on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

3/1/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. ARUN PRASAD,
Rank: நிலை Trainee No. 4/2025
VGR, Thanjavur.

தஞ்சாவூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 03/2026 U/s 120 (B). 409, 466 of IPC and 61(2), 316(5), 337 of BNS and Sec 13(1)(a), r/w 13(2) of PC Act 1988 (as amended in 2018) முதல் தகவல் அறிக்கையின் காலம் – 12 இன் தொடர்ச்சி..

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :</u> தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் பேரூராட்சியில் பணிபுரிந்த திரு. R. கார்த்திகேயன் செயல் அலுவலர், மதுக்கூர் பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் திரு. மதியழகன், அலுவலக உதவியாளர், மதுக்கூர் பேரூராட்சி ஆகியோர் கூட்டு சேர்ந்து, கடந்த 2024–2025 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் உத்திரவின் பேரில் டெங்கு தடுப்பு பணிக்காக 10 நபர்களை தற்காலிகமாக பணியமர்த்தி கொள்ளலாம் என்று வந்த குறிப்பாணையின் அடிப்படையில் மதுக்கூர் பேரூராட்சி செயல் அலுவலர் 6 நபர்களை நியமனம் செய்துவிட்டு, 10 நபர்கள் டெங்கு பணி மேற்கொண்டதுபோல் கணக்கு காட்டி வேலைக்கு வராத 4 நபர்களுக்கான பணத்தை அவருக்கு வேண்டிய நபர்களின் வங்கி கணக்கில் வரவு வைத்து அந்த பணத்தை அலுவலக உதவியாளர் திரு. மதி @ மதியழகன் மூலம் பணிக்கு வராத நபர்களிடமிருந்து திரும்ப பணத்தை பெற்று முறைகேடாக செயல்பட்டு, அரசுக்கு பண இழப்பை ஏற்படுத்தி, சுயலாபம் அடைந்துள்ளதாகவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மதுக்கூர், பள்ளிவாசல் தெருவை சேர்ந்த H.R. அக்பர் அலி என்பவரது புகாரின் அடிப்படையில், சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் (மு.கூ.பொ) அவர்களின் ந.க.எண் 2549/2024-1/ஊ3 நாள் 24.04.2025 இன் படி விசாரணை செய்ய முன் அனுமதி பெறப்பட்டும், இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை அவர்களது குறிப்பாணை எண் PE 94/2025/TP/TH, Dt: 12.08.2025 இன் படியும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் 21.08.2025 ஆம் தேதி அன்று முதனிலை விசாரணை (Preliminary Enquiry) பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. முதனிலை விசாரணையில், கடந்த 2024–ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் நடவடிக்கைகள் 1. ந.க.எண். 62/2023/பேரூ.3, நாள் 04.01.2024, 2. ந.க.எண் 18/2024/பேரூ.3, நாள்: 09.03.2024 3. ந.க.எண் 18/2024/பேரூ.3, நாள்: 06.08.2024 மற்றும் 4. ந.க.எண் 18/2024/பேரூ.3, நாள்: 05.10.2024 ஆகிய குறிப்பாணைகளின் படி குற்ற அலுவலர்கள் திரு. R. கார்த்திகேயன், செயல் அலுவலர் மற்றும் திரு. மதி @ மதியழகன், அலுவலக உதவியாளர், பேரூராட்சி அலுவலகம், மதுக்கூர் ஆகிய இருவரும் கூட்டு சேர்ந்து, மதுக்கூர் பேரூராட்சி செயல் அலுவலரான குற்ற அலுவலர் – 1 அவர்களால் டெங்கு பணிக்காக தற்காலிகமாக 10 டெங்கு பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, அதற்குண்டான ஆவணங்களில் போலியான தகவல்களை பதிவு செய்து, 10 பணியாளர்களுக்கும் அந்தந்த மாதம் வங்கி கணக்கு மூலம் சம்பள பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது தொடர்பான விசாரணையில், செல்வி. D. சபர்ணா என்பவர் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல், மே, செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய

மாதங்களில் டெங்கு பணி செய்யவில்லை என்பதும், திருமதி.S. சரண்யா செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய இரண்டு மாதங்கள் பணிக்கு வரவில்லை என்பதும், அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகையான 47,000/- மற்றும் ரூ 19,000/- முறையே, ஆக மொத்தம் ரூ 66,000/- தொகையை குற்ற அலுவலர் திரு. மதியழகன், அலுவலக உதவியாளர் மூலம் குற்ற அலுவலர் திரு. R. கார்த்திகேயன், செயல் அலுவலர் அவர்கள் பெற்றுள்ளது தெரியவருவதால், சந்தேக அலுவலர்கள் இருவரும் கூட்டு சேர்ந்து அரசு விதி முறைகளை மீறி, ஆவணத்தில் பொய்யான தகவலை பதிவு செய்து, நம்பிக்கை மோசடியில் ஈடுபட்டு, அரசு பணத்தை முறைகேடாக கையாடல் செய்து அரசுக்கு நிதியிழப்பை ஏற்படுத்தியுள்ளனர். இக்குற்றச்சாட்டு தொடர்பாக குற்ற அலுவலர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொள்ள ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (2018 திருத்தப்பட்டது) ச/பி 17(A)-இன் படி சென்னை, பேரூராட்சிகளின் இயக்குனர் அவர்கள் கடிதம் ந.க.எண் 2549/2025/ஊ3 நாள் 13.05.2026-இன் படி முன் அனுமதி பெற்றும், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குனர் அவர்களின் குறிப்பானை PE 94/2025/TP/TH நாள் 05.06.2026 தேதியிட்ட தபாலை 08.06.2026 அன்று பெற்றும், இன்று 08.06.2026 ஆம் தேதி, 14.00 மணிக்கு, தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் பேரூராட்சியில் பணிபுரிந்த திரு. இரா. கார்த்திகேயன், முன்னால் செயல் அலுவலர், மதுக்கூர் பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் திரு. கே. மதியழகன், அலுவலக உதவியாளர், மதுக்கூர் பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம் ஆகியோர் மீது தஞ்சாவூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, குற்ற எண்.03/2026 சட்டப் பிரிவுகள் 120(B), 409, 466 of IPC and 61(2), 316(5), 337 of BNS and Sec 13(1) (a) r/w 13(2) of Prevention of Corruption Act, 1988 (as amended in 2018)-இன் படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. (ஒப்பம்) இரா. அருண்பிரசாத். காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, தஞ்சாவூர், அய்யா, இந்த முதல் தகவலறிக்கையின் அசலை மாண்பமை தஞ்சாவூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அவர்கள் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பியும், நகல் ஒன்று அலுவலக கோப்பில் விசாரணைக்கும் வைத்தேன்.

8/6/26

(இரா. அருண்பிரசாத்),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
தஞ்சாவூர்.